ஸ்ரீ:

பிற்சேர்க்கை — A

ஸ்ரீ தேவாதிராஜன் திருமஞ்சன கட்டியம்

நாயிந்தே நாயிந்தே

1. லக்ஷ்மீ - நேத்ரோத்பலஸ்ரீ ஸதத - பரிசயாத் ஏஷ
ஸம்வர்த்தமான:
நாபீநாளீக ரிங்கன் மதுகரபடலீ தத்த - ஹஸ்தாவலம்ப: |
அஸ்மாகம் ஸம்பதோகான் அவிரள - துளஸீ தாம
ஸஞ்ஜாத பூமா,
காளிந்தீ காந்திஹாரீ கலயது வபுஷ: காளிமாகைடபாரே: ||

2. ஸந்தன்வானு தருணதுளஸீ தாமபி: ஸ்வாமபிக்யாம்
மாதங்காத்ரௌ மரகதருசிம் புஷ்ணதீ மானஸே ந: |
போகைச்வர்ய ப்ரிய ஸஹசரை: காபி லக்ஷ்மீ கடாக்ஷை:
பூயச்யாமா புவனஜனநீ தேவதா ஸந்நிதத்தே ||

3. மாஞர்ஹம் மஹதாம் மஹாநடஜடா - பர்யந்த -
நிர்யந்த்ரண
க்ரீடா - பந்துர - ஸிந்துராஜமஹிஷீ ஜன்மாஸ்பதம்
த்வத் - பதம் |
மாதங்காசல - மௌளிமண்டனமணே வந்தாரு ப்ருந்தாரக
ச்ரேணீசேகர பாரிஜாத - கலிகா சூடாலமீட்டாமஹே ||

4. வாழிஅருளாளர் வாழிஅணிஅத்திகிரி—வாழி யதிராசன்
வாசகத்தோர்—வாழி சரணாகதியென்னும் சார்வுடன்
மற்றொன்றை அரணாகக் கொள்ளாதார் அன்பு.

5. ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமிலா அன்று
நான்முகன் தன்னோடு தேவருலகோடு உயிர் படைத்த
பெருமாள்.

6. மண்ணும் நீரும் எரியும் நல் வாயுவும்
விண்ணுமாய் விரியும் எம்பெருமான்,

7. நீராய் நிலனுய்த் தீயாய்க் காலாய் நெடுவானுய்
சீரார் சுடர்களிரண்டாய் சிவனுய் அயனை பெருமாள்.

8. கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள்
தானும், மற்றை
நிலைகளும், வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினுல் அருள்
செய்து,
நீண்டமலைகளும், மாமணியும், மலர் மேல்மங்கையும்,
சங்கமும் தங்குகின்ற
அலைகடல்போல் நின்ற மாயனே!

9. மஞ்சாடு வரையேழும், கடல்களேழும், வானகமும்,
மண்ணகமும், மற்றும் எல்லாம் எஞ்சாமல் வயிற்றடக்கி
ஆலின்மேல் ஓளிளந்தளிரில் கண்வளர்ந்த ஈசனே!

10. இசைஏழு ஆறங்கம் ஐந்துவளர்வேள்வி நான்மறைகள்
மூன்றுதீயும் இருபொழுதும் சிந்தனைசெய்து
நான்மறைகள் தேடியோடும் செல்வனே!

11. ஆநிரை மேய்த்து அன்று அலைகடலடைத்திட்டு,
அரக்கர்தம் சிரங்களையுருட்டி, கார் நிறைமேகம் கலந்த
கண்ணனே!

12. வந்தெதிர்ந்த தாடகைதன் உரத்தைக்கீறி வருகுருதி
பொழிதர வன்கணையொன்றேவி, மந்திரங்கொள் மறை
முனிவன் வேள்விகாத்து, வல்லரக்கருயிருண்ட மைந்தனே!

13. சொல்லினுல் தொடர்ச்சி நீ, சொலப்படும் பொருளும் நீ,
சொல்லினுல் சொலப்படாது தோன்றுகின்ற சோதியே!

14. காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு, அவன்
நீள்முடியைந்திலும் நின்று நடம் செய்து
மீள அவனுக்கு அருள்செய்த வித்தகனே!

15. காராார் கடலையடைத்திட்டு இலங்கைபுக்கு
ஓராதான் பொன்முடி ஒன்பதோடொன்றையும்
நேரா அவன்தம்பிக்கே நீளரசீந்த ஆராவமுதமே!

16. சித்திரகூடத்து இருப்ப சிறுகாக்கை முலைதீண்ட,
அத்திரமே கொண்டெறிய அனைத்துலகும் திரிந்தோடி,
வித்தகனே இராமவோ நின்னபயம் என்றழைப்ப
அத்திரமே அதன் கண்ணை அறுத்த தேவே!

17. ஒருகுறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி
உலகனைத்தும் ஈரடியாலொடுக்கி, ஒன்றும்
தருகவெனு மாவலியைச் சிறையில் வைத்த தேவே !

18. பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப் பதங்களும்
பதங்களின் பொருளும், பிண்டமாய் விரிந்த
பிறங்கொளியனலும், பெருகியபுலனெடுநிலனும்,
கொண்டல் மாருதமும், குரை கடலேழும்,
ஏழுமாமலைகளும், விசும்பும் அண்டமும் தானுய் நின்ற
பெருமாள் !

19. முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில்
சுகலேசமெண்ணிய சூழ்வினை தீர்க்கத் துணிந்து அயனுர்
அகலாத அன்புடன் கொண்ட அயமேத வேதியின்மேல்
புகலோங்குபொன் மலையென்னதோர் புண்ணிய கோடியுடன்
பகலோன் பகல் விளக்காத் தோன்றிய தொல் அத்திகிரிச்
சுடரே !

20. ஆதியுகத்தயன் கண்டிடநின்ற அருளாளப் பெருமாள் !

21. காதலுயர்த்த களிற்றைத் திரேதையில் காத்தளித்த
பெருமாள் !

22. துவாபரத்தில் வாதுயர் தேவகருக்கு இரங்கி அருளும்
பெருமாள் !

23. சோதி அனந்தன் கலியில் தொழுதெழ நின்ற பெருமாள் !

24. தொண்டர்கள் தமக்குப் பிணியொழித்து
அமரர் பெருவிசும்பருளும் பேரருளாளனெம்பெருமான் !

25. அருளாப் பெருமாளென்றும் அருளாழி அம்மானென்றும்
திருமாமகளைப் பெற்றும் மன்னெஞ்சம்
கோயில் கொண்ட பேரருளாளனென்றும் வியப்பா
விருதூதும்படி கரைபுரண்ட கருணைக் கடலே !

26. கமலையுடன் அரசாளும் கரிகிரிமேல் காவலனே !

27. கானகத்தில் கமலையுடன் கண்டுகந்து விளையாடும்
தேனெடுத்த சோலைகள் சூழ் திருவத்தியூரானே !

28. அமரர்தொழும் அத்திகிரி அம்புயத்தாள் ஆரமுதே !

29. தன் திருமாதுடனே தான் தனிஅரசாய் உறைகின்ற
அந்தமிலா அருளாழி அத்திகிரி அருள்முகிலே !

30. ஆசைமிகுத்தயன் மகவேதியின் அற்புதனே !

31. ஆரணநூல் தந்தருளால் அடைக்கலம் கொண்டருளும்
வாரணவெற்பில் மழைமுகில் போல் நின்ற மாயவனே !

32. போதலர் மாதுடன் புந்தியில் அன்பால் புகுந்தளிக்கும்
தூதனும் நாதனுமாய தொல்லத்திகிரிச்சுடரே !

33. மேவுந்திருவருளால் வினைதீர்த்து என்னை ஆண்டருளும்
பூவன்தொழு அத்திமாமலைமேல் நின்ற புண்ணியனே !

34. கட்டெழில் சோலை கரிகிரிமேல் நின்ற கற்பகமே !

35. மதுவாரிளம் பொழில் வாரணவெற்பின் மழைமுகிலே !

36. மருவிக் கரிமேல் வரந்தந்திடும் மன்னவனே !

37. நாமங்கை மேவிய நான்முகன்வேதியின் நம்பரனே !

38. அத்திமாமலைமேல் நின்ற ஆராவமுதமே !

39. பொன்னகில் சேர்ந்தலைக்கும் புனல்வேக வடகரையில்
தென்னனுகந்து தொழும் தேனவேதியர் தெய்வமே !

40. அம்பொற்கரங்களில் ஐம்படை கொண்டு அஞ்சலென்றளிக்கும்
செம்பொன் திருமதிள்சூழ் சிந்துராசலச்சேவகனே !

41. தாமோரிளங்கதிரோவென்று என்னுள் இருளறுக்கும்
மாமோகம் மாற்றும் மதிள் அத்தியூரின் மரகதமே !

42. கருடனுருவா மறையின் பொருளாம் கரிகிரிமேல் நின்று
அனைத்தும் காக்கின்ற கண்ணனே !

43. புண்டரீக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே !

1. ''முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ''
என்னலாம்படி நிரதிசய தேஜோமய கனககிரி ஸத்ருசமாய்,
திவ்யாளக பங்க்தியாகிற ராத்ரியோடே அகடிதகடனஸாமர்த்
தியத்தாலே சேர்ந்ததென்னலாம்படி, கதிராயிரமிரவி
கலந்தெரித்தாலொத்த நிகிலபுவனதிராஜ்ய சூசகமான
திருஅபிஷேகமும்,

2. விமலநீலஜ்யோதிர்மய நீலாளகபந்த பந்துரமான திருமுடியும்,

3. 'கொள்கின்ற கோளிருளைச் சுகர்ந்திட்ட கொழுஞ்சுருளின் உட்கொண்ட நீலநன்னூல் தழைகொல், அன்று மாயன் குழல்' என்னும்படி வதனரவிந்த மகரந்த ரஸாஸ்வாதத்திற்காக வண்டொழுங்கு படிந்தாப் போலே அசைகிற நிரதிசய புண்யகந்த வாஸி அனந்த-திகந்தராளமான திருக்குழல் கற்றையும்,

4. ''நாள்மன்னு வெண்திங்கள்கொல், நயந்தார்கட்கு நற்சிலை கொல்'' என்னும்படி அத்திருக்குழல் சேர்த்தியாலே ஒருபாகம் இருளோட சேர்ந்த அஷ்டமி சந்திரனை அனுகரிக்கிற திருநெற்றியும்,

5. 'இன்னுயிற்கு ஏழையர்மேல் விளையும் இணைநீலவிற்கொல், மன்னியசீர் மதனன் கருப்புச்சிலைகொல்'' என்னும்படி அத்திரு நெற்றியில் அழகுக்கு கிற்றெடுக்கலாம்படி தன்கைச் சார்ங்கமதுவேபோல் வட்டமழகிய திருப்புருவங்களும்,

6. ''ஏழையராவியுண்ணும் இணைக்கூற்றம் கொலோ, ஆழியம் கண்ணபிரான் திருக்கண்கள் கொலோ'' என்னும்படி, 'ஈச்வரோஹம்' என்றிருப்பாரைத் தோற்பித்து, நமஸ்தே என்று திருவடிகளிலே விழப்பண்ணுமவையாய், நிரதிசய பிரேமகர்ப்ப-அதி சீதள திவ்யாவலோகனம்ருத-வார்ஷகங்களான கரியவாகி புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்களும்,

7. ''மாட்டுயிர் கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ'' என்னலாம்படி ச்ருதிஸுரபி நிச்வாஸமான கோலங்கொழுந்து விட்டதொரு கொடி போன்ற திவ்ய-நாஸா வம்சமும்,

8. கண்கள் சிவந்து பெரியவாய், வாயும் சிவந்து கனிந்து, உள்ளே வெண்பலிலகு சுடரிலகு விலகு மகர குண்டலத் தனென்று சுற்றடிக் கொள்ளும்படியாயும், பல்லாயிரம் பெருந்தேவிமார் எல்லாரும் சூழ திருக் குரவை கோத்து, கன்னற்குடம் திறந்தாலொத்தூறி கணகண சிரித்து முன்வந்து நின்று முத்தங்கொடுக்க அனுவ்ருத்த ததாதன ப்ரகர்ஷாதிவ புல்லங்களாய், நாச்சிமார்களுக்கு லீலாமணிதர்ப்பணங்கள் போன்ற திவ்ய-கபோலங்களும்,

9. ''வாலியதோர் கனிகொல், விஜயாட்டியேன் வல்வினைகொல், கோலந்திரள் பவளக் கொழுந்துண்டங்கொலோ'' என்றும், ''கற்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ, திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ'' என்னலாம்படி செம்பவளத் திரள் போன்ற வபாபரிமளோல்லாஸ-வாஸிதா தரபல்லவமும்,

10. ''என்று நின்றே திகழும் செய்யவீன் சுடர் வெண்மின்னுக் கொல், அன்றி என் ஆவியடும் அணிமுத்தங்கொல்'' என்னலாம்படி அபிநவ - பூர்ணசந்திரகிரண - ருசிரங்களான தூமுறுவல் தொண்டைவாயில் திருமுத்துக்களும்,

11. மகரம் தழைக்கும் தளிர்கொல் என்னலாம்படி காந்திக்கு லீலாடோலைகள் போலே அசைகிற மகரநெடுங்குழைக் காதுகளும்,

12. ''கோளிழைத் தாமரையும் கொடியும் பவளமும் வில்லும், கோளிழைத் தண்முத்தமும் தளிரும் குளிர்வான்பிறையும், கோளிழையாவுடைய கொழுஞ் சோதி வட்டங்கொல்'' என்னலாம்படி சுற்றுமொளிவட்டம் சூழ்ந்து சோதிபரந்த சம்பூர்ண சந்திரனும் நேரொவ்வான் என்னும்படி, நிரவதிக - சௌந்தர்ய - லாவண்யமார்ய - ஸாரஜன்மபூமியான திருமுக மண்டலமும்,

13. ''குருஷ்வ மாமனுசரம்'' என்று அடிபணிந்தாரைக் கூவிக் கொள்ளும் போது ஸ்நிக்த-கம்பீர-மதுரநாதமாய், நாச்சி மாருடைய வஸ்த்ரழும்போடு வாசியில்லாத ரேகாத்ரயத்தை உடைத்தாய், திருமேனி ஒளியாலே பசுத்த ஸ்ரீ பாஞ்சஜன்யம் போன்ற திருக்கழுத்தும்,

14. ''கற்பகக் காவென நற்பலதோள்கள்'' என்னலாம்படி சதுர்வித புருஷார்த்தங்களையும் வழங்குமளவன்றிக்கே, ஏதேனுமொரு கிஞ்சித்காரம் பண்ணினாருக்கு, ஸர்வஸ்வதான மான காடபரிஷ்வங்கத்தைக் கொடுக்கக்கடவனவான திருத் தோள்களும்,

15. மரகதசிலாதல மஞ்ஜுஹரமாய், மௌக்திக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப ரஞ்சிதமாய், தருணதுளஸீ சித்ரவைஜயந்தீ விராஜிதமாய், பெரிய பிராட்டியாருக்கு கோயில் கட்டண

மாய், நித்தியானுபவம் பண்ணச் செய்தேயும் இறையும் அகலகில்லேன் என்னும்படி அவளைப் பிரிச்சேற்றக் கடவதாய், நாச்சிமாருடைய கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பிலுல் அலங்க்ருதமாய், ஸ்ரீபதந்யாஸதந்யமாய், சந்த்ரிகோதார ஹாரமான திருமார்பும்,

16. நீலமேகத்திலே நிலைமின்கொடி படர்ந்தாப் போலே, திருமேனிக்கு பரபாக ரஸாவஹமாய், அழகுவெள்ளத்திற்கு அணைகட்டினுப் போலே இருக்கிற திருவண்முப்புரிநூலும்,

17. வைகந்தர்ய - ஸாகரமிட்டளப்பட்டு சுழித்தாப் போலே நெஞ்சையும் கண்ணையும் சுழியாறுபடுத்துகிறதாய், காரேழ் கடலேழ் மலையேழ் உலகுண்டும் ஆராததான, அயனைப் படைத்ததோர் எழில் உந்தியும்,

18. "படிச்சோதியாடையொடும் பல்கலனுய், நின் பைம்பொற் கடிச்சோதி கலந்ததுவோ" என்னலாம்படி மரகதக் குன்ற மொத்த திருமேனியிலே மாணிக்க ஒளிசூழ்ந்தாப் போலும், திருவரைப் பூத்தாப் போலும், பொருந்தின பொன்னெத்த பீதகவாடை உடையும்,

19. நிரவதிக-தீப்தியுக்த-கதாதரண வ்யக்ர-ஸவ்யகர-ஸங்கமஜாய மான-ரோமாஞ்ச-ரம்ய கிரணமாய், த்ருடபீடித மதுகைடப சோணிதபடல பரிபாடலாம்பரகடிதமாய், குஸுமசரதந்தா வள கனகச்ருங்கலா ஸத்ருசமான திருவரைநூல்மாலையும்,

20. காமாராம - ஸ்திர - கதளிகாஸ்தம்ப - ஸம்பாவனீயங்களாய், கமலா-பூமி-நீளோபதானங்களாய், நயஞ்சத்-காஞ்சீ-கிரண ருசிரங்களாய், லாவண்யௌக த்வய மென்னலாம் படியான திருத்துடைகளும்,

21. ஆய்ச்சி யசோதைப் பிராட்டி எழில்மத்தின் பழந்தாம்பா லோச்ச பயத்தால் தவழ்ந்த ஸௌந்தர்யஸார-ஸமுதாயமான திருமுழந்தாள்களும்,

22. ஜநநபதவீஜங்காலரை முன்னேடிவந்து விலக்கக் கடவதாய், கந்தர்ப்ப-காஹள - நிஷங்க - களாசிகா - ருசிரங்களான திருக் கணைக்கால்களும்,

23. வேதங்களுக்கெல்லாம் மேல்சாற்றாய், ஸர்வாத்மாக்களுக்கும் ஸாமாந்ய தைவதமாய், வஜ்ர-த்வஜாங்குச-ஸுதாகலசாத பத்ர-கல்பத்ருமாம்புருஹ-தோரண-சங்கசக்ர-மத்ஸ்யாதிமண் டிதமாய், வடிவிணையில்லா மலர்களும் மற்ற நிலமகளும் கூசிப் பிடிக்க வேண்டும்படி அத்யந்த ஸுகுமாரங்களாய், ''அடிச் சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ'' என்னலாம் படி, ஆதாரபத்மாலங்காரமாய், அணிகுருகைநகர் முனிவர் நாவுக்கமைந்த தேனே மலரும் துயரறுசுடரடி இணைகளும்,

24. நீலமேக நிபமான நிருமேனியிலே நிலமின்கள் போலே விளங்குகிற ஜகதபிமானி-தேவதாத்மாக்களாகிற திவ்யா பரணயுதங்களும்,

25. நிரவதிக-தீப்தியுக்த-ஸௌர்யமண்டலம் போலும், நிரதிசய-ஒளஜ் வல்ய-பரிபூர்ண சாரத-சந்திரமண்டலம் போலும், ஜாஜ்வல்ய மானங்களாய், அஞ்சனகிரியை அணைந்த சந்திராதித்யர்கள் போலே பரஸ்பர பரபாகத்தை உடைய ரான திருக்கையில் ஆழ்வார்களும்,

26. ''உமதடிகள் அடைகின்றேன் என்று ஒருகால் உரைத்தவரை அமையுமினி என்பவர்போல்'' அஞ்சல் அஞ்சல் அஞ்சலென வைத்த அபயஹஸ்தமும்,

27. அப்ராக்ருத - ஸ்வாஸாதாரண - நிரவத்ய - நிரதிசயகல்யாண-ஸ்வபோக்யபூத - ஸர்வவித - திவ்யகந்தானுலிப்தமான தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடி மேலும் தாளிணை மேலும் புணைந்த தண்ணந்துழாயனுய், ஸ்ரீசட கோபன் நிற்கிற ஸ்ரீபாதபீடஸநாதமான கோப்புடைய சீரிய சிங்காதனத்திலே, திருமகள் மண்மகள் நீளை முதலா எல்லாத் தேவியரும் தன்னுடனே திகழ்ந்துநிற்க, பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்தருளும் எங்கள் ஆராத அருள் அமுதமே! என்னை மனங்கவர்ந்த ஈசனே! வானவர்தம் முன்னவனே! இமையோர் தலைவா! மெய் நின்று கேட்டரு ளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே.

த்வம் மே அஹம் மே குதஸ்தத்
ததபி குத இதம் வேதமூல-ப்ரமாணத்
ஏதச்ச அநாதி-ஸித்தாத் அநுபவ-விபவாத்
ஸோபி ஸாக்ரோச ஏவ |
க்வாக்ரோச: கஸ்ய கீதாதிஷு மம விதித:
கோத்ர ஸாகூ ஸுதீ: ஸ்யாத்
ஹந்த! த்வத்-பக்ஷபாதீ ஸ இதி
ந்ருகலஹே ம்ருக்ய-மத்யஸ்தவத் த்வம் ||

எலா-ஜாதி-லவங்க-சம்பக-மிலத் தக்கோல-முஸ்தா-நீசா-
யுக்மோசிர-பஜூர-ஸார-விலஸத் - கர்ப்பூர-காச்மீரவத் |
ஸ்நாநீயம் தடநீய-பாஜந-ப்ருதம் தீர்த்தம் க்ருதார்த்தம் குரு
ஸ்நாநேந த்ரிதாத்ரிநாத! ஜநதாம் த்ராயஸ்வ
தாபத்ரயாத் ||

உயர்வற உயர்நலமுடைய பெருமாள்
மயர்வற மதிநலமருளிய பெருமாள்
அயர்வறுமமரர்கள் அதிபதியான பெருமாள்
கண்டவாற்றுல் தனதே உலகென நின்ற பெருமாள்
தெள்ளியார் பலர் கைதொழுஞ் தேவனை பெருமாள்
ஈருலகைப் படைக்க எண்ணியிருந்த பெருமாள்
எழில் மலரோன் தன்னையன்றே ஈன்ற பெருமாள்
வாரிதிசூழ் வையகம் வாழ்வித்த பெருமாள்
வண்மையுடன் வரந்தரும் பெருமாள்
திணைத்தனையும் திருமகளை விடாத பெருமாள்
தேசொத்தார் மிக்காரு மிலாத பெருமாள்
அருளாளர் தாமெனினும் தமக்கொவ்வாத பெருமாள்
தருமன்விட தான் தூதுபோன பெருமாள்
தரணிபொறுத் திண்பாரம் தவிர்த்த பெருமாள்
அஞ்சின நீ என்னை அடையென்ன பெருமாள்
பார்த்தனுக்குத் தேரூர்ந்த பெருமாள்
பஞ்சவரைப் பலவகையும் காத்த பெருமாள்
பாஞ்சாலி குழல் முடித்த பெருமாள்

முத்திமழை பொழியும் முகில் வண்ணப் பெருமாள்
மூலமென ஓலமிட வல்ல பெருமாள்
உத்திரவேதிக் குள்ளே உதித்த பெருமாள்
உம்பர் தொழும் கழலுடைய பெருமாள்

பொல்லாக் குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று, அடியை மூன்றை
இரந்து, அங்கே நின்று ஆழ்கடலும் மண்ணும் விண்ணும் முடிய
ஈரடியால் முடித்துக் கொண்ட களையாறவோ !

நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்கா நாட்டை நலியும்
அரக்கரை நாடித்தடிந்த களையாறவோ !

உத்தம வயர்ந்தலம் அமைத்ததோர் எழில்தரு உயர்த்தகணையால்
அத்திற அறுவன்முடி பத்துமொரு கொத்தென உதிர்த்த
களையாறவோ !

மொய்மாம் பூம்பொழில் பொய்கைமுதலைச் சிறைபட்டு நின்ற யானை
இடர் தீர்க்க அறைகுலையத் தலைகுலைய புள்ளூர்ந்து சென்ற
களையாறவோ !

ஒளியா வெண்ணெய் உண்டானென்று உரலோடு ஆயச்சி ஒண்
கயிற்றால் விளியாவார்க்க ஆப்புண்டு விம்மிஅழுத வழலாறவோ !

காட்டைநாடித் தேனுகனும் களிறும் புள்ளும் உடன்மடிய
வேட்டையாடி வந்த வேர்வையாறவோ !

மச்சொடு மாளிகையேறி மாதர்கள் தம்மிடம்புக்கு கச்சொடு
பட்டைக்கிழித்து காம்புதுகிலவைகீறி நிச்சலும் தீமைகள் செய்த
விடாய்தீரவோ !

விருந்தாவனத்தே நின்று இட்டமான பசுக்களை இனிதுமறித்து
நீரூட்டி விட்டுக் கொண்டு விளையாடிய வேர்வையாறவோ !

பல்லாயிரம் பெருந்தேவிமார் எல்லாரும்சூழ திருக்குரவை
கோத்த களையாறவோ !

பார்மன்னர் மங்கப் படைதொட்டு வெஞ்சமத்து
தேர் மன்னர்க்காய் அன்று தேரூர்ந்த களையாறவோ !

புகலோங்கு பொன் மலையென்றதோர் புண்ணியகோடியுடன்
அயமேத வேதியின்மேல் எரிசுடர் நடுவுள் அவதரித்த வழலாறவோ !

ஆவாரார் துணையென்று துளங்கி நின்ற இளையாழ்வார்
துயர் தீர்க்க, முள்ளும் கல்லும் கடிய வெங்கானிடை பொன்னடி
நோவ பெருந்தேவியாருடனே நள்ளிருளில் சென்ற கோலமாறவோ !

நடந்த கால்கள் நொந்தவோ இடந்தமெய் குலுங்கவோ அடியார்
அல்லல் தீர்த்தசைவோ, அன்றே இப்படித்தான் நீண்டு
தாவிய அசைவோ !

தேவர்களும் முனிவர்களும் சித்தர்களும் பக்தர்களும்
பூவில் மழைபொழிந்து போற்றவே—

வன்பெருவானகமுய்ய, அமரருய்ய, மண்ணுய்ய,
மண்ணுலகில் மனிசருய்யவே, துன்பமிகு துயரகல
அயர் வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழும் தொண்டர்
வாழவே, பண்டை நான்மறைமௌளி பணிந்திடும்
தொண்டை மண்டல வேதியர் வாழவே, தூயதென்மறை
வல்லவர் வாழவே, அத்திகிரி அருள் முகிலே மஞ்சன மாடி
அருள்வதே !

தேனுர் கமலத் திருமகள்நாதன் திகழ்ந்துறையும்
வானுடுகந்தவர் வையத்திருப்பிடம்—வன்றருமக்
காணரிமயமும் கங்கையும் காவிரியும் கடலும்
நாணுநகரமும் நாகமும் சூடிய நன்னிலமே.

புருடன் மணிவரமாகப், பொன்ரு மூலப்பிரகிருதி மறுவாக,
மான்தண்டாக, தெருள்மருள் வாள் மறைவாக, ஆங்காரங்கள்
சார்ங்கம் சங்காக, மனம் திகிரியாக, இருடீகங்கள் சரைந்தும்
சரங்களாக, இரு பூதமாலை வனமாலையாக, கருடனுருவா மறையின்
பொருளாம் கண்ணன்டு கரிகிரிமேல் நின்றனைத்தும் காக்கின்றனே.

உத்தம வமர்த்தலமமைத்ததோர் எழில்தனு உயர்த்த கணையால்
அத்திற அரக்கன்முடி பத்தும் ஓர்கொத்தென உதிர்த்த திறலோன்
மத்துறு மிகுத்ததயிர் மொய்த்தவெணை வைத்ததுணும்
அத்தனிடமாம்

அத்திகிரி பத்தர்வினை தொத்தற அறுக்கும் அணி அத்திகிரியே.

வரத! விரசய த்வம் வாரிதாசேஷ-தோஷாம்
புனருபசித புண்யாம் பூஷிதாம் புண்யகோட்யா
ஸிதமுதித மனேபி: தாவகை: நித்ய-ஸேவ்யாம்
ஹத-ரிபு ஜநயோகாம் ஹஸ்திதாம்ந: ஸம்ருத்திம்.

ஸ்ரீரங்க-த்விரத-விருஷாத்ரிபூர்வகேஷு
ஸ்தானேஷு ஸ்திரவிபவா பவத்-ஸபர்யா
ஆகல்பம் வரத! விதூத-வைரிபக்ஷா
பூயஸ்யா பவதனுகம்பயைவ பூயாத்.

சோணயதே வரத! மௌளி மணிப்ரபாபி:
மந்தாகிநீ பவதி மங்கள-மந்தஹாஸை:
காத்ராம்சுபி: விஸ்ருமரை: பமுனயதே தே
தீர்த்தத்ரயம் ப்ரகடயத்யபிஷேக-வாரி.

(தாயாரும்கூட எழுந்தருளியிருக்கும் போது)

அக்ரேபர்த்து: ஸரஸிஜமே பத்ரபீடே நிஷண்ணம்
அம்போ ராசேரதிகத-ஸௌ ஸம்ப்லவாதுத்திதாம் த்வாம்
புஷ்பாஸார-ஸ்தகித புவஸ் புஷ்கலாவர்த்தகாத்யை:
க்லுப்தாரம்பா: கநக கலசை: திக்கஜா: ஸ்நாபயந்தி.

———